முழுப் பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

# 22 - தமிழ் மொழியும் இலக்கியமும்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)
## 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்
### புள்ளித்திட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| **பகுதி** I | - | 1 x 40 | = | **40 புள்ளிகள்** |
| **பகுதி** II | | | | |
| 01 ஆம் வினா | - | 10 x 2 | = | 20 புள்ளிகள் |
| 02 ஆம் வினா | - | | = | 25 புள்ளிகள் |
| 03 ஆம் வினா | - | | = | 10 புள்ளிகள் |
| 04 ஆம் வினா | - | | = | 10 புள்ளிகள் |
| 05 ஆம் வினா | - | | = | 15 புள்ளிகள் |
| **மொத்தம்** | | | = | **80 புள்ளிகள்** |
| **பகுதி** III | | | | |
| 01 ஆம் வினா | - | 10 x 2 | = | 20 புள்ளிகள் |
| 02 ஆம் வினா | - | 04 x 5 | = | 20 புள்ளிகள் |
| 03 ஆம் வினா | - | | = | 15 புள்ளிகள் |
| 04 ஆம் வினா | - | | = | 15 புள்ளிகள் |
| 05 ஆம் வினா<br>06 ஆம் வினா<br>07 ஆம் வினா | } ஏதேனும் ஒன்று | | = | 10 புள்ளிகள் |
| **மொத்தம்** | | | = | **80 புள்ளிகள்** |

**இறுதிப்புள்ளியைக் கணித்தல்**

| | | | |
|---|---|---|---|
| பத்திரம் I | = | 40 | புள்ளிகள் |
| பத்திரம் II | = | 80 | புள்ளிகள் |
| பத்திரம் III | = | 80 | புள்ளிகள் |
| மொத்தம் | = | 200 | புள்ளிகள் |
| இறுதிப்புள்ளிகள் | = | 200 ÷ 2 | |
| | = | 100 | |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **22** විෂයය / பாடம்: **தமிழ் மொழியும் இலக்கியமும்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 2 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 3 | 32. | 3 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 4 | 33. | 4 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 2 | 34. | 1 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 1 | 35. | 1 |
| 06. | 3 | 16. | 3 | 26. | 4 | 36. | 3 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 2 | 37. | 3 |
| 08. | 3 | 18. | 4 | 28. | 4 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 2 | 29. | 3 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 4 | 30. | 2 | 40. | 3 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) இலட்சியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதாலோ கடைப்பிடித்து ஒழுக முயல்வதாலோதான் உலகம் இனிமை தருகின்றது.
- இந்த வாக்கியத்தின் எழுவாய் யாது?

உலகம்

(ii) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
'அழுவானை யிவன்யா ரென்று'

அழுவானை + இவன் + யார் + என்று

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக.
'பழத்த நம்பி ஏலேலோ, நானிருக்கேன்'

பழத்தை நம்பி ஏலேலோ நான் இருக்கிறேன்

(iv) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.
ஆற்றிலேயா கடலிலேயா என்றாள்

"ஆற்றிலேயா கடலிலேயா?" என்றாள்.

(v) - வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் விபத்துக்குள்ளானது.
- அந்த விபத்தில் காயமுற்றவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

மேற்படி இரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்கி எழுதுக.

- வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான வாகனத்தில் காயமுற்றவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.
- வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் விபத்துக்குள்ளானதில் காயமுற்றவர்கள் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

(vi) 'நனை' என்ற வினையடி தன்வினையாகவும் பிறவினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வோர் வினைமுற்றினை ஆக்குக.

தன்வினை - நனைந்தான்

பிறவினை - நனைத்தான்

(vii) பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழை உள்ள சொற்களை இனங்கண்டு அவற்றைத் திருத்தி சரியான முறையில் எழுதுக.
கலைமானி, வர்த்தமாணி, வெப்பமானி, விமானி

கலைமானி – கலைமாணி

வர்த்தமாணி – வர்த்தமானி

(viii) 'படு' என்பது வினையாகவும் பெயரடையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

வினை - அவன் கட்டிலிற் படுத்தான்.

பெயரடை - கணித பாடத்தில் அவன் படு கெட்டிக்காரன்.

(ix) ‘ஓதிப்படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்’
- இங்கு ஆகுபெயராக இடம்பெற்ற சொல் யாது?
- அது என்ன வகை ஆகுபெயர்?

- ஊர்
- இடவாகுபெயர்

(x) திருக்குறளிற் கூறப்படும் கருத்துக்கள் எமது வாழ்வை வளப்படுத்துவதாக உள்ளன.
- இந்த வாக்கியத்தில் உள்ள வழுவை இனங்கண்டு வழுவற்ற வகையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

திருக்குறளிற் கூறப்படும் கருத்துக்கள் எமது வாழ்வை வளப்படுத்துவனவாக உள்ளன.

**(02 x 10 = 20 புள்ளிகள்)**

வினா இல. 02 புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| (அ) | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) | கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) | எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **25 புள்ளிகள்** |

**பொருளமைவும் அளவும்**

அறிவுறுத்தல்கள், வழிகாட்டற் குறிப்புகள் என்பவற்றை அனுசரித்து பொருட்பொருத்தத்துடன் கேட்கப்பட்ட சொல் அளவில் கட்டுக்கோப்பாக எழுதப்படல். கருத்துக்களில் தொடர்ச்சி காணப்படல்.

**கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும்**

கருத்துக்களை தெளிவாக எடுத்துரைத்தல்.
பொருத்தமான மொழிப்பிரயோகம்.
சொல், வாக்கியம் எழுத்து வழுக்கள் இன்மை.
தேவைப்படுமிடத்து பொருத்தமான உதாரணங்கள், மேற்கோள்கள், ஆதாரங்கள் தந்து எழுதுதல்.

**எழுத்து நுட்பங்கள்**

பந்தியமைப்பு, பந்திகளுக்கிடையே தொடர்புடைமை, குறியீடுகள் இடப்படல், உறுப்பமைவு, நேர்த்தி.

**தலையங்கம்**

பொருத்தம், சுருக்கம், கவர்ச்சி.

புள்ளியிடல்

உ+ம் $Q2 = \frac{08}{12} + \frac{04}{06} + \frac{03}{05} + \frac{02}{02} = \frac{17}{25}$

மேற்குறிப்பிட்ட 4 அம்சங்களின்கீழ் புள்ளிகளைப் பகுத்து வழங்குக.

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i) இன்று தினசரிப் பத்திரிகைகள் பலராலும் வாசிக்கப்படுகின்றன. இவை சிறுவர், பெரியோர் என்ற வேறுபாடின்றி சகலரினதும் அறிவு, மொழி வளர்ச்சி, பொழுதுபோக்கு, இலக்கிய உணர்வு, கலை, கலாசார வளர்ச்சி முதலானவற்றிற்கு உதவுகின்றன. இவற்றை உள்ளடக்கி ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) நாம் ஒருபோதும் சுயநலவாதிகளாக வாழக்கூடாது. பிறருக்காக வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை. பிறருக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் பலர் உள்ளனர். நோயால் பீடிக்கப்பட்டவர்கள், வறுமையில் வாடுபவர்கள், முதியோர்கள் எனப் பலருக்கும் எம்மால் இயன்ற உதவியைச் செய்யமுடியும். இவ்வாறான கருத்துக்களை உள்ளடக்கி மாணவர் மன்றத்தில் நிகழ்த்தும் ஒரு **மேடைப்பேச்சு.**

(iii) விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் சாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன என்று கருதும் ஒருவருக்கும் அவற்றால் பாதகமான விளைவுகளே ஏற்படுகின்றன எனக் கருதும் மற்றொருவருக்கும் இடையே இடம்பெறும் ஓர் **உரையாடல்.**

(iv) நினைத்துப் பார்க்க முடியவில்லை! அவன் கல்வியில் எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தான்! ஆயின் போதைவஸ்து என்னும் அரக்கனால் அவன் சீரழிக்கப்பட்டான். அதனால் அவன் அடைந்த துன்பங்களும் அவமானங்களும் சொல்லிமாளா... ஆயினும் அவன் மறுவாழ்வு பெற்றான். என்ற வகையில் போதைவஸ்துப் பாவனைக்கு எதிரான உணர்வைத் தூண்டுவதான ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**(i) மாதிரித் தலைப்புகள் :** பத்திரிகையின் பயன்கள்
வெகுசனத் தொடர்பு சாதனங்களில் பத்திரிகையின் பணி
தினசரிப் பத்திரிகைகளின் சமூகப் பயன்பாடு (இவை போன்றன)

- வெகுசனத் தொடர்புசாதனங்களில் பத்திரிகைகளின் முக்கியத்துவம்
- அனைத்துத் தரப்பினராலும் பயன்படுத்தப்படுவன
- பத்திரிகையின் பயன்கள்
  - அறிவு வளர்ச்சி (கல்வி, பொது அறிவு, உலக அறிவு முதலானவை)
  - மொழி வளர்ச்சி (மொழி அறிவு விருத்தியடைதல்)
  - பொழுதுபோக்கு (பயன்தரு வகையில் பொழுதைப் போக்குதல்)
  - இலக்கிய உணர்வு (இலக்கியப் படைப்புக்களுக்கான களமாக அமைவதோடு பல்வகை இலக்கியங்களை வாசித்தறியக் கூடிய வாய்ப்பும் காணப்படல்)
  - கலாசார வளர்ச்சி (பல் கலாசார பண்புகளை அறியும் வாய்ப்பு)
  - கலைவளர்ச்சி
- பத்திரிகைகளை வாசிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படலும் தூண்டுதல் அளிக்கப்படலும்

**(ii) மாதிரித் தலைப்புக்கள்:** மன்னுயிரையும் தன்னுயிராய் நினை
பிறர் நலம் பேணுவோம்
உதவி செய்து உவகையுறுவோம் (இவை போன்றன)

- சுயநலம், பிறர்நலம் பற்றிய விளக்கம்
- பிறருக்காக வாழ்தலின் சிறப்பு
- பிறர் நலம் பேணி வாழ்ந்தோர்
  - சிபி
  - கர்ணன்
  - மகாத்மா காந்தி
  - நெல்சன் மண்டேலா

- அன்னை தெரேசா
  - வறியவர், நோயாளிகள், முதியவர்கள் போன்றோருக்கு உதவுதல்
  - பிறர் நலம் பேணி வாழ்தலால் ஆத்ம திருப்தியும் மன அமைதியும் மகிழ்ச்சியையும் பெறுதல்

**குறிப்பு :- மேடைப்பேச்சு வடிவம் பேணப்பட வேண்டும்.**

(iii)

**மாதிரித் தலைப்புகள்**: விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் நாமும்
விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளால் ஏற்படும் சாதக பாதகங்கள் (இவை போன்றன)

**அவதானிப்புக்குரியவை**

- உரையாடல் அமைப்பில் அமைதல் வேண்டும்
- உரையாடல் இருவருக்கிடையே இடம்பெறல்வேண்டும்
- உரையாடல் அமைப்பில் அமைதல் வேண்டும்
- ஒருவர் கருத்தை இன்னொருவர் உள்வாங்கித் தர்க்கரீதியாக உரையாடுதல்
- உரையாடலுக்கிடையே விடயத் தொடர்ச்சியைப் பேணுதல்

**சாதகங்கள்**

- விஞ்ஞான தொழிநுட்பவளர்ச்சி ஏற்படல் (மருத்துவம், விவசாயம், விலங்குவேளாண்மை,கல்வி, போக்குவரத்து, தொடர்பாடல் முதலானவை)
- வேலைகள் துரிதமாக்கப்படுவதால் வேலைநேரம், மனித சக்தியை மீதப்படுத்த முடிதல்.
- மனிதருக்கிடையே நல்லிணக்கம், உறவுகள் வளர்தல்
- புதிய தொழில்களுக்கான வாய்ப்புகள் ஏற்படல்

**பாதகங்கள்**

- புதிய கண்டுபிடிப்புக்களைத் தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் பேரழிவு
- சூழல் மாசடைதல்
- வன்முறைகள், போர்களுக்கான வாய்ப்புகள் ஏற்படல்
- பொருளாதார, சமூக சீர்கேடுகள் உருவாகுதல்
- உடலுழைப்பு குறைவடைதலும் வேலையில்லாத் திண்டாட்டமும்
- இயற்கை வளங்கள் பாதிப்புக்குள்ளாதல்

**குறிப்பு :- உரையாடல் வடிவம் பேணப்பட வேண்டும்.**

(iv)

- **மாதிரித் தலைப்புகள்:** மீட்சி
  புனர்ஜன்மம்
  புதிய பாதை (இவை போன்றன)
- சிறுகதைக்குரிய அமைப்புக் காணப்படல்
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பனைச் செறிவுடன் எழுதுதல்
- கதையை சுவைபடவும் விறுவிறுப்பாகவும் யதார்த்தப்போக்கிலும் நகர்த்திச் செல்லுதல்
- கதைக்குப் பொருத்தமான மொழிநடையைக் கையாளுதல்
- இயல்பான பாத்திர உரையாடல்களைப் பயன்படுத்துதல்
- போதைவஸ்து பாவனைக்கு எதிரான படிப்பினையை வெளிப்படுத்தல்
- முடிவு பொருத்தமாக அமைதல்

**(25 புள்ளிகள்)**

**3.** பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை **40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

வாழ்க்கையிலுள்ள செய்திகளை உள்ளபடியே எடுத்துக் காட்டுவன நாட்டுப் பாடல்கள். இவற்றை வாழ்க்கை அனுபவத்தின் சாரம் என்று கூறலாம். ஆங்கிலத்திற் 'பாமரர் பாட்டுக்கள்' (Folk Songs) என்று குறிக்கும் பாடல்களையே நாட்டுப் பாடல்கள் என்கின்றோம். இப்பாடல்களை யார் எக்காலத்திற் பாடினார் எனக் கூற இயலாது. நீண்ட காலமாக இவை வாய்மொழியாகவும் கேள்வி வழியாகவும் தொடர்ந்து வழங்கியிருக்கின்றன.

நாட்டுப் பாடல்களில் இலக்கண வழுக்கள் இருக்கக்கூடும்; இவை யாப்பிலக்கண விதிகளுக்கு முரண்படப் பாடப்பட்டிருக்கக் கூடும். சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லும் குற்றத்திற்கு இலக்காகி இருக்கக்கூடும். ஆயினும் மக்கள் உள்ளத்தைக் கவரும் ஆற்றல் இவற்றிற்கு உண்டு. கூற எடுத்ததை நேர் முகமாக வெளிப்படையாக எளிய முறையில் இவை சொல்வதனால் இவற்றிலே ஒரு நயம் காணப்படுகின்றது; அழகு இருக்கின்றது. இவை உயிர்த்துடிப்புடன் இயங்குகின்றன. இதனாலே இவை கல்வியறிவு இல்லாத பொது மக்களின் உள்ளத்திலே அதிக காலமாக நிலைத்திருக்கின்றன.

நாட்டுப் பாடல்களுக்குத் தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. மக்கள் இனம் உண்டான போது அவையும் உண்டாயின; அது முடிவடையும் போது அவையும் முடிவடையும். இடைக்காலத்தில் மக்களின் நடை உடை பாவனைகளை ஏற்று, இவை வளர்ந்து வந்திருக்கின்றன. அந்த அந்தக் காலத்துக்கு ஏற்ற செய்திகளையும் முறைகளையும் பண்பாட்டையும் இவை ஏற்றிருக்கின்றன. நாட்டில் உண்டாகும் புதுமைகள் முதன் முதலில் நாட்டுப் பாடல்களிலேயே வரும். எனவே, நாட்டுப் பாடல்கள் காலந்தோறும் இடந்தோறும் பரவி, மாறியும், விரிந்தும், சுருங்கியும் வழங்குகின்றன.

(10 புள்ளிகள்)

சுருக்கம்

- பாமரர் பாட்டுக்களான நாட்டார் பாடல்கள் மக்களின் வாழ்க்கை அனுபவத்தின் சாராம்சமாக அமைவன.
- பாடியவர் பெயர் அறியப்படாதனவாய் கேள்வி வழியாகத் தொடர்ந்து வழங்குவன.
- குறைபாடுகள் சில உடையனவாயினும் மக்கள் உள்ளத்தைக் கவர்வன.
- நயமும் அழகும் காரணமாக இவை பாமர மக்கள் மனதில் நன்கு நிலைபெற்றுள்ளன.
- தொடக்கமும் முடிவும் இல்லாத இப்பாடல்கள் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுதல்களை அடைந்து வழங்குகின்றன.

| | | |
|---|---|---|
| **விடய உள்ளடக்கம்** | **-** | **06 புள்ளிகள்** |
| **சொல்லளவு** | **-** | **02 புள்ளிகள்** |
| **மொழிநடை** | **-** | **02 புள்ளிகள்** |

- **40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.**
- **35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**
- **35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான புள்ளிகளில் ஒன்றைக் குறைக்கவும்.**
- **சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.**
- **சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.**
- **சொற்களை எண்ணும்போது நிதானமாகக் கணக்கிடவும்.**

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பண்டைத் தமிழகத்தில் பட்டினங்களும் கிராமங்களும் செழித்தோங்கின. பிற நாடுகளுடன் வாணிபம் ஒழுங்காக நடைபெற்றதால் நாட்டில் செல்வம் செழித்தது. மேற்கே வெகு தூரத்திலுள்ள எகிப்து, கிரேக்கம், ரோம் முதலிய நாடுகளுடன் கடல்கடந்து போகும் கப்பல்கள் மூலம் நடைபெற்ற வியாபாரம் வளர்ந்தது. மிளகு, முத்து, தந்தம், சந்தனம், ஏலக்காய், துணி, தாவர எண்ணெய், விலங்குகளின் தோல்கள், மயில்கள், குரங்குகள் முதலியவைகள் ஏற்றுமதி செய்யப் பெற்றன. ரோம் நாட்டிலிருந்து தங்கம், வெள்ளி நாணயங்களும், கிரேக்க நாட்டிலிருந்து மது முதலிய பண்டங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. கிழக்கே கடல் கடந்து கலங்களில் சென்று கடாரம் முதலிய நாடுகளிலும், சாவகம் முதலிய தீவுகளிலும் தமிழர் குடியேறினர். இதற்கும் வாணிபத்திற்கும் உதவும் முறையில் கடற்கரையோரங்களில் பல துறைமுகங்கள் கலங்கரை விளக்கங்களுடனும், சுங்கச் சாலைகளுடனும், அகன்ற வீதிகளுடனும் அமைந்திருந்தன. வாணிபத்தின் பொருட்டு வந்த பல மொழிகளைப் பேசும் பிற நாட்டினர் இத் துறைமுகங்களில் குடியேறி, மக்களுடன் நெருங்கிப் பழகி அரசருக்கும் பணியாற்றினர். இவ்வாறு பணியாற்றிய யவனரைப் பற்றிய குறிப்புகள் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் காணப் பெறுகின்றன; இவர் அரசருக்கும் அரண்மனைகளுக்கும் காவல் வேலை பார்த்ததாகத் தெரிகிறது. தமிழ் அரசர் தங்கள் தூதர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தங்கள் நாட்டின் தேவைகளைப் பெற்றுக் கொண்டதுமன்றி, பெருமையையும் நிலை நாட்டினர்.

(i) பண்டைத் தமிழகத்தில் செல்வம் செழித்ததற்குக் காரணம் யாது?

(ii) பண்டைத் தமிழகம், வியாபார ரீதியில் தொடர்புகொண்டிருந்த மேலைநாடுகள் யாவை?

(iii) பண்டைத் தமிழர் கிழக்கே கடல் கடந்து குடியேறிய இடங்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

(iv) கடற்கரை ஓரங்களில் அமைந்திருந்த துறைமுகங்கள் எவ்வெவற்றுக்கு உதவும் முறையில் அமைந்திருந்தன?

(v) தமிழரசர்கள் தங்கள் நாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பெருமையை நிலை நாட்டுவதற்கும் செய்த காரியம் யாது?

(10 புள்ளிகள்)

(i) பிற நாடுகளுடன் வாணிபம் ஒழுங்காக இடம்பெற்றமை

(ii) எகிப்து, கிரேக்கம், ரோம் முதலான நாடுகள்

(iii) கடாரம் முதலிய நாடுகள், சாவகம் முதலிய தீவுகள்

(iv) கடல்கடந்த நாடுகள், தீவுகளில் தமிழர் குடியேறுவதற்கும் வாணிபம் செய்வதற்கும்

(v) தங்கள் தூதுவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியமை

**(02 x 5 = 10 புள்ளிகள்)**

**5.** நுளம்பினால் பரவும் டெங்கு என்னும் உயிர்க்கொல்லி நோயின் தாக்கம் இன்று பெருமளவில் அதிகரித்துள்ளது; பலர் மரணித்துமுள்ளனர். நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதன் மூலமே நோயைக் கட்டுப்படுத்தலாம். எனவே டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கான காரணிகளை இல்லாமற் செய்யவேண்டிய கடமையை வலியுறுத்தி காந்திநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு காந்திநகர் பிரதேச சபைக்குள் அடங்கும் கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுச் செயலாளர் க.பாலசுப்பிரமணியன் என்று உம்மைக் கருதிக்கொண்டு **100** சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

அல்லது

பொன்னகர் ஊரில் உள்ள சந்திரோதயம் மத்திய மகாவித்தியாலயத்தின் விளையாட்டுக் குழுவின் செயலாளர் ச.மாணிக்கவாசகன் என்று உம்மைக் கருதிக்கொண்டு அந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வுகள், தடகளப் போட்டிகள், சுவட்டு நிகழ்ச்சிகள், பரிசளிப்பு முதலானவை தொடர்பில் **100** சொற்களில் அறிக்கை ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

**கடிதம்**

**அமைப்பு**

- முகவரி - 01 புள்ளி
- உள்முகவரி - 01 புள்ளி
- விளிப்பு - 01 புள்ளி
- தலைப்பு - 01 புள்ளி
- பதவி, ஒப்பம் - 01 புள்ளி

**- 05 புள்ளிகள்**

**உள்ளடக்கம் - 07 புள்ளிகள்**
**மொழிநடை - 03 புள்ளிகள்**
**மொத்தம் 15 புள்ளிகள்**

(தரப்பட்ட தரவுகளுக்கமைய முகவரி முதலானவை அமைதல் வேண்டும்)

**தலைப்பு** : டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி கோரல் (இது போன்றன)

**உள்ளடக்கம்**

- டெங்கு நோய் மிகவும் ஆபத்தான உயிர்க்கொல்லி நோயாகும்
- இதிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி டெங்கு நுளம்புகளை ஒழித்தலே ஆகும்.
- நீர் தேங்கக் கூடிய பொருட்கள், சூழலில் சேர்க்கப்படும் உக்காத பொருட்கள்
- பிரதேச சுகாதாரப் பணியாளர்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள்
- சிரமதானப் பணிகளை மேற்கொள்ளல்

**அறிக்கை**

**அமைப்பு**

| | |
|---|---|
| தலைப்பு | - 01 புள்ளி |
| உப தலைப்புகளில் / பந்திகளில் எழுதுதல் | - 01 புள்ளி |
| இடம் , காலம் | - 01 புள்ளி |
| பதவி , ஒப்பம் | - 01 புள்ளி |
| திகதி | - 01 புள்ளி |
| | **(05 புள்ளிகள்)** |

உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
மொழிநடை - 03 புள்ளிகள்
மொத்தம் 15 புள்ளிகள்

தலைப்பு - பொன்னகர் சந்திரோதயம் மத்திய மகாவித்தியாலயத்தின் மெய்வல்லுனர் போட்டி (இது போன்ற தலைப்பு)

உள்ளடக்கம் -

ஆரம்ப நிகழ்வுகள் - பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் வருகையும் வரவேற்றலும் கொடியேற்றல்
- ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல்
- அணிவகுப்பு

- தடகளப் போட்டிகள் - நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டெறிதல் முதலியன
- சுவட்டு நிகழ்ச்சிகள் - 100 மீற்றர், 200 மீற்றர், 1500 மீற்றர் ஓட்ட நிகழ்வுகள், அஞ்சலோட்டம் முதலியன
- பரிசளிப்பும் நிறைவும்

(15 புள்ளிகள்)

1. சுருக்கமான விடை தருக.

(i) "மடைத் தலையில் ஓடுமீன் ஓட
உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு"

(அ) மடைத்தலை

(ஆ) உறுமீன்

என்பவற்றின் பொருளைத் தருக.

(ii) "பொய்மைசேர்
மதியினிற்புலை நாத்திகங் கூறுவர்"

(அ) நாத்திகம் என்றால் என்ன?

(ஆ) அதில் ஆசிரியருக்குள்ள வெறுப்பு எவ்வாறு வெளிப்படுகிறது?

(iii) "தோன்றல் துயர்க்கடலின் ஏக"
இங்கு,

(அ) தோன்றல் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணியை இனங்காண்க.

(iv) "கன்றுபிரி காராவின் றுயருடைய கொடி"

(அ) கொடி எனக் குறிப்பிடப்படுபவள் யார்?

(ஆ) அவளுடைய துயரம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(v) "என்னத்துக்கு இந்த வண்டிலுக்கு குடிலப் போல ஓல கட்டினிங்க"
இக் கூற்று,

(அ) யாரால்

(ஆ) யாருக்குக் கூறப்பட்டது?

(vi) "பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே"

(அ) கேண்மை என்பதன் பொருள் யாது?

(ஆ) 'வளைகள் செறிந்தன' என்பதனால் வெளிப்படுத்தப்படுவது யாது?

(vii) "நெஞ்சகத்தை நிறைத்திருக்கும் நிர்மலமாம் வானில்
நிறைமதிதன் துணைவியர்கள் சூழவரும் கோலம்"

(அ) 'நிர்மலமாம் வான்' என்பதனால் உணர்த்தப்படுவது யாது?

(ஆ) நிறைமதிதன் துணைவியர்கள் எனப்படுவன யாவை?

(viii) "கோது இலான் இந்த மொழி கூறுதலும்
மாமாயன் கூறல் உற்றான்"

(அ) கோது இலான்

(ஆ) மாமாயன்

எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

(ix) "வெம்புலிவாய் மானென்ன வீணே கொடுத்திடுவார் செம்பொற் றிரளுடனே"

(அ) இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது?

(ஆ) 'செம்பொற்றிரள்' என மறைமுகமாகக் குறிப்பிடப்படுவது யாது?

(x) (அ) 'கூனலிளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்' எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(ஆ) 'கூனல் இளம்பிறை' என்பதை விளக்குக.

**(2 × 10 = 20 புள்ளிகள்)**

## பகுதி III

(i) (அ) வாய்க்கால்

(ஆ) பெரியமீன்

(ii) (அ) கடவுள் மறுப்புக்கொள்கை

(ஆ) பொய்மை சேர்ந்தது, கீழானது (புலை) என்னும் அடைமொழிகள் மூலம்

(iii) (அ) பரதன்

(ஆ) உருவக அணி / துயர்க்கடல்

(iv) (அ) கோசலை

(ஆ) கன்றைப் பிரிந்த பசுபோல என்ற உவமை மூலம்

(v) (அ) காசிமால்

(ஆ) மூத்தவாப்பாவுக்கு

(vi) (அ) காதல் / நட்பு

(ஆ) மகிழ்ச்சி / பூரிப்பு

(vii) (அ) வானத்தின் களங்கமற்ற தன்மை

(ஆ) நட்சத்திரங்கள்

(viii) (அ) தருமன்

(ஆ) கிருஷ்ணன் / கிருட்டிணன் / விஷ்ணு / திருமால்

(xi) (அ) உவமை

(ஆ) சீதனம் / சீர்வரிசை

(x) (அ) சிவன் / குற்றாலநாதர்

(ஆ) வளைந்த இளம்பிறை

**(2 × 10 = 20 புள்ளிகள்)**

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர் தட்டினும் தட்டு வாராமலே அன்னதானத்துக்கு
மார்தட்டிய துரை மால் சீதக்காதி வரோதயனே.

(அ) பஞ்சத்தின் கொடுமை
(ஆ) சீதக்காதியின் கொடைத்திறம்
என்பன எவ்வாறு உணர்த்தப்படுகின்றன?

(ii) கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கண்ணார்
அல்லாமேல் ஆணை - உன்னை அடையாட்டி காட்டுப் பள்ளி
ஓதிப் படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய் தீங்கை - அல்லா எள்ளளவும் ஏற்க மாட்டான்

(அ) காதல்மீது தலைவன் கொண்டுள்ள தீவிரம்
(ஆ) அவனது அறவுணர்வு
என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

(iii) கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதும்
வீட்டி லடைத்துவைக்கும் விரகிலருக் கியாதுரைப்பேம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய் பசுங்கிளியே.

(அ) பொதுவாக பெண்களை ஆண்கள் எவ்வாறு நடத்துகின்றனர்
(ஆ) அவ்வாறு நடத்துபவர்கள் தொடர்பில் கவிஞர் எத்தகைய மனநிலையினைக் கொண்டுள்ளார்
என்பவற்றை விளக்குக.

(iv) ஒரு திடீர் உந்துதலால்தான் கம்பியூட்டர் ஒன்று வாங்குவதாக முதல்நாள் இரவு எங்கள் வீட்டில் முடிவாகியது. என் ஒன்பது வயது மகன் அரவிந்தன் தன்னுடைய சிநேகிதர்கள் எல்லாரிடமும் கம்பியூட்டர் இருப்பதாக அளந்தான். என் ஆசை மனைவியோ ஆர்மோனியப் பெட்டிபோல இதையும் வளைத்துவிடலாம் என்று ஆர்வமான கனவுகளுடன் காத்திருந்தாள். இது என்ன வெண்டைக்காயா, நுனியை முறித்துப் பார்த்து வாங்க? கம்பியூட்டர் முந்திப்பிந்தி வாங்கியும் அனுபவமில்லை. கடைக்காரனுடைய முகலாவண்யம் கதைப்பதற்கு ஆசையூட்டுவதாகவும் இல்லை. வீர்யம் நிறைந்தவன் போலக் காணப்பட்டான். அவன் தலையில் இருக்கவேண்டிய முடியெல்லாம் மூக்கு வழியாகவும் காது வழியாகவும் வந்து கொண்டிருந்தன. எனக்கு அவன் சொன்ன விளக்கங்களும், கேட்ட கேள்விகளும் தலைகால் புரியவில்லை.

(அ) கம்பியூட்டர் ஒன்றை வாங்குவது இலகுவானதல்ல என்பது எவ்வாறு உணர்த்தப்படுகிறது?
(ஆ) விற்பனையாளரின் தலையில் முடி இல்லை என்பதை ஆசிரியர் எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார்?

(v) இராமாயணத்தில் ஒரு காட்சி. தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகிறான். ஒன்று அரசியல். மற்றையது சத்தியம். இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்வதில் அவன் திண்டாடுகின்றான். அரசியற் கொள்கையின்படி மூத்த புதல்வனுக்கு முடிசூட்டுவதா? அல்லது கைகேயிக்குக் கூறிய சத்தியவாக்கை நிலைநாட்டுவதா? இந்த தருமசங்கடத்தின் மத்தியிலே ஊசலாடுகின்ற அரசன் நினைக்கின்றான்: அரசியல் நிலைமாறக் கூடியது, சத்தியம் நிலைமாறாதது. நிலைமாறுந் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன்; நிலைமாறாத இயல்புள்ள சத்தியவாக்கைக் கடைப்பிடிப்பேன். இதுதான் அரசனது முடிபு. நடுநிலையிலே நின்று வாக்குறுதியைக் காப்பாற்றிச் சத்தியத்திலே நிலைநின்று உயிரைத் தியாகஞ் செய்கின்றான்.

(அ) தசரதன் 'ஊசலாடுகின்றான்' என்பதன் மூலம் ஆசிரியர் உணர்த்துவது யாது?
(ஆ) சத்தியத்தின்மீது தசரதன் கொண்ட உறுதிப்பாடு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

**(04 × 5 = 20 புள்ளிகள்)**

(i) (அ) நெல்லும் பொன்னும் சமமான மதிப்புடையனவாகக் காணப்படல்

(ஆ) ஆர் தட்டினும் தட்டுவராமல் அன்னதானத்திற்கு மார்தட்டிய துரை

(ii) (அ) தலைவியை அடையாவிட்டால் இறந்துவிடுவேன் எனல்

(ஆ) காதலித்த பெண்ணைக் கைவிடக்கூடாதென்ற எண்ணம்

(iii) (அ) கூண்டில் கிளியாக, வெறும் பண்டமாக

(ஆ) வீரமில்லாதவர் / அறிவிலர் என்று அவர்களைக் குறிப்பிடல்

(iv) (அ) 'ஆர்மோனியப்பெட்டிபோல வளைத்துவிடலாம்' என மனைவி எண்ணுதல்
'இது என்ன வெண்டைக்காயை நுனி முறித்துப்பார்த்து வாங்க' என்று கூறுதல்

(ஆ) தலையில் இருக்க வேண்டிய முடியெல்லாம் மூக்கு, காது வழியாக வந்துகொண்டிருந்தன எனக் கூறுதல் மூலம்

(v) (அ) தசரதன், சத்தியத்தை நிலைநிறுத்துவதா அல்லது அரசியல் மரபைப் பேணுவதா என்று முடிவெடுக்க முடியாது திண்டாடுதல்

(ஆ) 'உயிரைத் தியாகம் செய்தேனும் சத்தியத்தை நிலைநாட்டுவேன்' என்பதன் மூலம்

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

3. குற்றாலக் குறவஞ்சியில்,

(அ) திரிகூட மலையின் உயர்ச்சி

(ஆ) அதன் வளம்

ஆகியனவற்றை வெளிப்படுத்துவதில் ஆசிரியர் காட்டும் திறனைத் தெளிவுபடுத்துக.

**அல்லது**

(அ) **பேதைமை** என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளவற்றைத் தெளிவுபடுத்துக.

(ஆ) அதில் வள்ளுவர் கையாண்ட அணிகளை இனங்கண்டு, அவற்றில் நீர்காணும் நயங்களை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

(அ) **மலையின் உயர்ச்சி**

- குற்றாலமலையில் உள்ள குரங்குகள் சிந்தும் கனிகளுக்காக வானவர்கள் கையேந்துகிறார்கள் என்பதன் மூலம் தேவலோகத்தைவிட குற்றாலமலை உயர்ந்தது என்பது உணர்த்தப்படுகிறது.
- கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர் என்பதன் மூலம் தேவலோகமும் குற்றாலமலையும் அருகருகே இருப்பது உணர்த்தப்படுகிறது.
- குற்றால அருவியின் அலை வான் வழியாக ஒழுகுகின்றது. அந்த நீரில் வான்வழிச் செல்லும் தேரின் சக்கரங்களும் குதிரைகளின் கால்களும் வழுக்குகின்றன என்பதன் மூலம் வானத்தை விட குற்றாலமலை உயர்ந்தது என்பது உணர்த்தப்படல்.
- தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும் என்பதன் மூலம் மலைக்கு அண்மையில் தேவலோகம் இருப்பது கூறப்படல்.
- கவனசித்தர் வந்து காயசித்தி விளைத்தல்
- குற்றாலநாதர் வீற்றிருத்தல்

**(08 புள்ளிகள்)**

(ஆ) **மலைவளம்**

- நீர்வளம் (முழுங்குதிரைப் புனலருவி கழங்கென முத்தாடும், முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்)
- இயற்கை உணவு வளம் - (கிழங்கு கிள்ளித் தேன் எடுத்து வளம்பாடி நடிப்போம் செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்)
- செய்கை பண்ணப்பட்ட உணவு – தினை
- பெறுமதிமிக்க யானைத் தந்தத்தால் தினை குற்றுதல்
- சண்பக மலர்வாசம் வானுலகுவரைச் செல்லல்

**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

(அ)

- தனக்குக் கேடு தருவனவற்றை ஏற்றுக்கொண்டு நன்மை தருவனவற்றைக் கைவிடுவதே பேதைமை
- தனக்குப் பொருத்தமில்லாத ஒழுக்கத்தில் ஆசை கொள்வது பேதைமை யாவற்றிலும் பேதைமையாகும்
- தகாதவற்றுக்கு நாணாதிருத்தல், தக்கவற்றை நாடாதிருத்தல், அன்பின்மை, நன்மைகளை விரும்பாமை ஆகியன பேதையர் தொழில்கள்
- நூல்களை ஓதி அவற்றின் பொருளை உணர்ந்து பிறர்க்கு எடுத்துரைத்தபோதும் தான் அந்த நெறியில் நில்லாதவனைவிட பெரிய பேதை எவனும் இல்லை.
- பேதை, ஏழு பிறப்புகளில் தான் அழுந்தத்தக்க துன்பத்தை ஒரு பிறப்பிலேயே செய்துகொள்ள வல்லவன்
- ஒழுக்கநெறி அறியாத பேதை ஒரு செயலை மேற்கொண்டால் அச்செயல் நிறைவுபெறாது

பொய்படுவது மாத்திரமன்றி அவன் சிறை செல்லவும் நேரும்.

- பேதை ஒருவன் பெருஞ்செல்வத்தை அடைந்தால் அவனோடு தொடர்பில்லாதவர்கள் அதனை அனுபவிக்க, அவனது சுற்றத்தார் பசியால் வாடுவர்.
- பேதை ஒருவனுக்கு ஏதேனும் கிடைத்தால் அவனது நிலை பித்தன் ஒருவன் கள்ளுண்டு மயங்கியது போலாகும்.
- பேதையருடன் கொள்ளும் நட்பு இனியது. ஏனெனில் பேதையரின் பிரிவு துன்பம் தருவதில்லை.
- சான்றோர் குழுவில் பேதை புகுவது தூய்மையற்றதை மிதித்த ஒருவன் கழுவாத காலொடு படுக்கையில் புகுந்தது போன்றதாகும்.

**(09 புள்ளிகள்)**

(ஆ) **உவமையணி**

1. மையல் ஒருவன் களித்தற்றால்--------

**உவமானம் :-** பைத்தியமான ஒருவன் கள்ளுக்குடித்தநிலை

**உவமேயம் :-**அறிவில்லாதவனிடம் செல்வம் சேருதல்

**பொதுத்தன்மை :-**குழப்பம் / பயனின்மை / வீண்விரயம்

**நயம் :-** பேதையருக்கு வரும் வசதிகளால் தீமையே அதிகரிக்கும் என்பது உணர்த்தப்படல்

2. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்-------

**உவமானம்:-** அழுக்கான காலைப் படுக்கையில் வைத்தல்

**உவமேயம்:-** சான்றோர் கூட்டத்தில் பேதை புகுதல்

**பொதுத்தன்மை :-** பொருத்தமின்மை / இழிவானது

**நயம் :-** பேதையரின் இழிவு உணர்த்தப்படல்

**(06 புள்ளிகள்)**

**(09 + 06 = 15 புள்ளிகள்)**

**(15 புள்ளிகள்)**

**4.** **அற்றைத்திங்கள்** என்ற நாடகத்தில்,

(அ) பாரி இருந்த காலத்திலும் அவனை இழந்த காலத்திலும் பறம்புமலை மக்களின் மனநிலை

(ஆ) பாரிமகளிரும் கபிலரும் தம் நாட்டின்மீது கொண்ட ஈடுபாடு

ஆகியன புலப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்

(அ) மூத்தம்மாவின் ஆளுமைத் திறன்

(ஆ) அந்த ஆளுமை காசிமில் செல்வாக்குச் செலுத்திய விதம்

ஆகியன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக. **(15 புள்ளிகள்)**

(அ) **பாரி இருந்த காலத்து மனநிலை**

- கவலையற்ற வாழ்வு
  - போர் முற்றுகை நடந்த பொழுது மலைவாழ் பெண்கள் பகைவர்களுடைய குதிரைகளை விளையாட்டாக எண்ணிக் கொண்டிருத்தல்
  - பாரி போரில் தோற்கமாட்டான், பறம்புமலையும் வீழாது என அசையாத நம்பிக்கை கொண்டிருத்தல்
  - கள்ளைப் பகிர்ந்துண்ணல்

**பாரியை இழந்த காலத்து மனநிலை**

- பாரியின் இழப்பில் மக்கள் கையறுநிலையில் இருத்தல் (விதிர் விதிர்த்துப் போயிருத்தல் -

குறவர், கானவர். எயினர் முதலானோர்)

- பகல் பொழுதுகளில் பெண்கள் உமணர்களது உப்பு வண்டியை எண்ணிக்கொண்டிருத்தல்

**(07 புள்ளிகள்)**

(ஆ) **பாரி மகளிரின் ஈடுபாடு**

- மலைமடியில் தாலாட்டுக்கேட்டு சுகமாக கண்வளர்ந்தோம் எனல்
- குறத்திகள் தொடுத்துத் தந்த குறிஞ்சி மலர்மாலை வாடினாலும் மணம் போகலையே எனல்
- பறம்புமலையில் அனுபவித்தவற்றை விட்டுப் போகமுடியாது வருந்துதல்
  - பறம்புமலையை, பால்வார்க்கும் நிலவை எப்படி எடுத்துச் செல்வது, மக்களின் அன்பை எப்படி விட்டுச் செல்வது எனல்
  - வரகும் எள்ளும் முளைத்த நிலத்தையும், கள் மணக்கும் குடிசையினையும் விட்டுப் போகமுடியாது தவித்தல்

**கபிலரின் ஈடுபாடு**

- இயற்கையின்மீது கொண்ட பற்று
  - அருவியின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி, இலைகளின் சலசலப்பு இவைகளைக் காதுகொடுத்துக் கேட்டல்
- பறம்புமலையைப் பிரிவது மலையைவிடக் கனக்கிறது எனல்
- நீரை ஒரு முடக்குக் குடியுங்கள், வாசனைப் பூக்களை நுகருங்கள் அவற்றை நினைத்துக் கொண்டு செல்லுங்கள் எனல்
- பாரியுடனான நட்பை நினைத்து ஏங்குதல்
- பறம்புமலைச் சூழலை அனுபவித்து அது இனிக் கிடையாது என ஏங்குதல்
- நீர்வாரும் கண்களின் ஈரத்தில் பறம்புமலையின் அழகிய காட்சி நிலைத்து நிற்கும் எனல்.
- ஆற்றாமையோடு பறம்பு மலையை வாழ்த்திச் செல்லுதல்

**(08 புள்ளிகள்)**

**(07 + 08 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

(அ) **மூத்தம்மாவின் ஆளுமைத்திறன்**

- கண்ணியத்துக்குரிய தோற்றம்
- முதுமைநிலையிலும் குன்றாத உற்சாகமும் மனோதைரியமும்
- வறுமைநிலையிலும் தாய், தந்தையற்ற தன் பேரப்பிள்ளைகளை அக்கறையுடன் வளர்க்கும் பொறுப்புணர்ச்சி
- கணவனுடனான அன்னியோன்னியமான உறவு நிலை
- ஊரவர்களுக்கு உதவும் மனப்பான்மை
- ஊரார் மதித்து முதன்மையளிக்கும் வகையிலான வாழ்க்கை முறை (முடிசூடா ராணி)
- நோய்நொடியால் முடங்கிவிடாது தானே பரிகாரம் செய்யும் தேர்ச்சி
- சுயபொருளாதார முயற்சிகளால் குடும்பத்தை நடத்தும் தெம்பு
- கிராமியப் பாரம்பரியங்களுடன் கூடிய வாழ்க்கைமுறை
- இயல்பான நகைச்சுவை உணர்வு **(07 புள்ளிகள்)**

(ஆ) **ஆளுமை காசிமில் செல்வாக்குச் செலுத்திய விதம்**

- புராணகாலத்து அரசிகள், இராசவம்சத்துப் பெண்கள் பற்றிய கதைகளைக் கேட்கும்போது
- காசிமுக்கு மூத்தம்மாவின் நினைவு வருதலும் , அவவை ஓர் அரசியாகக் கற்பனை செய்தலும்

- தன்னிடம் இயல்பாக இருந்த பயத்தை உதறித்தள்ளிவிட்டு தன்னையும் ஓர் இளவரசனாகக் கற்பனை செய்தல்
- மூத்தம்மா என்ற மகாராணியின் கீழ் இருப்பதில் மிகுந்த பெருமை கொள்ளுதல்.
- மூத்தம்மாவின் திடீர் மரணத்தால் வருத்தமடைதலும் அதனைத் தைரியத்துடன் எதிர்கொள்ளலும்
- மூத்தம்மாவின் இழப்பின் பின் தன் தங்கையைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்புணர்ச்சி முனைப்புறுதல்

(08 புள்ளிகள்)

(07 + 08 = 15 புள்ளிகள்)

- **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5. கிருட்டினன் தூதுச் சருக்கத்தில்,**

(அ) குருநாட்டின் வளம்

(ஆ) கிருட்டினன் பெருமை

என்பன வெளிப்படுமாற்றினை விளக்குக. (10 புள்ளிகள்)

அ) **குருநாட்டின் வளம்**

- வயல்கள் நிறைந்த நாடு
- வயல்களில் வரால்மீன்கள் உலாவித் திரிதல்
- வயல்களில் ஆம்பல் மலர்களும் தாமரைகளும் மலர்தல்
  (கயிரவமும் தாமரையும் கமழ் பழனக் குருநாடு)
- சோலைகள் நிறைந்திருத்தல்
- வண்டுகள் மலர்களில் தேனுண்டு ரீங்காரம் செய்தல்
- (தாது ஊதி அளி முரலும்)
- உழவர்களின் முற்றங்கள் தோறும் சங்குகள் ஊர்ந்து திரியும் நீர்வளம்
  (உழவர் முன்றில் தோறும் நந்து ஊரும் புனல் நாடு)

(05 புள்ளிகள்)

(ஆ) **கிருட்டினன் பெருமை**

- அமரர் கோமான், எம்பிரான், மாமாயன், இழிவெல்லாம் தீர்த்தவன் என்று சிறப்பித்துக் கூறுதல்.
- குவலயாபீடமென்ற யானையின் தந்தத்தை ஒடித்தவன்
  (சிந்தூரத் திலகநுதல் சிந்துரத்தின் மருப்பொசித்த செங்கண்மால்)
- சிவபிரானின் இரத்தல் தொழிலை முடிவுக்குக் கொண்டு வந்தவன்
  (கடவுள் கங்கை நீர்முடித்தான் இரவொழித்த.....)
- தேவர்களும் முனிவர்களும் வேதங்களும் போற்றும் திருவடிகளை உடையவன்
- உலகமுழுவதையும் தனது தொப்புளில் இருந்து தோற்றுவித்தவன்.
- தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியை மணந்தவன்
- துளசிமாலை அணிந்தவன்
- கௌத்துப மணிமாலையை அணிந்தவன்
- பாண்டவர்க்காய் தூது சென்றவன்

(05 புள்ளிகள்)

(05 + 05 = 10 புள்ளிகள்)

**6.** நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்,

(அ) வாதமகாசபையின் இயல்புகள்

(ஆ) நாவலர் எழுந்தமை

என்பனவற்றை ஆசிரியர் வெளிப்படுத்தும் வகையினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

(அ) **வாதமகாசபையின் இயல்புகள்**

- வாதம் செய்வதில் வல்லவரும் அறிஞருமான விசுவநாதபிள்ளை தலைமைதாங்குகின்ற சபை
- கல்விமான்கள், பிரபுக்கள், பிராமணர், உபாத்தியாயர் உள்ளிட்ட பிரபல்யமானவர்கள் திரள் திரளாக வந்து வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்ட பெருமை உடையது.
- யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த பெரும் சட்டநிபுணர்களால் நிறைந்தது.
- வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடிய திறமை வாய்ந்த சட்டநிபுணர்கள் கூடியிருக்கும் சிறப்புடையது.
- வாதமகாசபை என சிறப்பிக்கத்தக்கது.
- போர்க்களங்களில் உபயோகிக்கப்படும் ஆயுதங்களை ஒத்ததான வாதத்திறமை காணப்பட்டமை.

**(05 புள்ளிகள்)**

(ஆ) **நாவலர் எழுந்தமை**

- தலையணைகள் அங்குமிங்கும் சிதறின என நாவலர் தருமாவேசத்துடன் எழுந்த வேகத்தைக் குறிப்பிடல்
- நாவலர் வாதத்துக்கு எழுந்த வேகத்தை கம்பராமாயணத்தில் இராமன் கோதண்ட வில்லை வளைக்க எழுந்த வேகத்துடன் ஒப்பிடல்
- நாவலருடைய தோற்றம், பார்வை, வேகம், இவற்றை வர்ணிக்க ஒரு கம்பர் இல்லையே என ஆதங்கப்படல்
- நாவலர் எழுந்தபோது சபையில் ஏற்பட்ட அமைதியை பிரசண்டமாருதத்திற்குப் பின் ஏற்படும் அமைதியுடன் ஒப்பிடுதல்.

**(05 புள்ளிகள்)**

**(05 + 05 = 10 புள்ளிகள்)**


[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

7. **தேயிலைத் தோட்டத்திலே...** என்ற கவிதையில்

(அ) தோட்டத் தொழிலாளர் மீதான கவிஞரின் பரிவு

(ஆ) அவர்களைப் புறக்கணிக்கும் சமூகம்மீது கவிஞர் முன்வைக்கும் விமர்சனம்

ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**பரிவு**

- ஊனையும் உடலையும் ஊட்டி இம்மண்ணை உயிர்ப்பித்தவர்கள்
- பழுதிலாதவர்கள்
- ஆழப் புதைந்த தேயிலைச் செடியின் அடியில் புதைந்தவர்கள்
- எவரோ வாழ்வதற்காக தம்முயிரை ஈந்தவர்கள்
- எவராலும் கண்டு கொள்ளப்படாதவர்கள்
- மரியாதை பெறாதவர்கள்

**(05 புள்ளிகள்)**

**சமூகம் மீதான விமர்சனம்**

- தோட்டத் தொழிலாளர்கள் இறந்து போனால் அவர்களது இறப்பை சமூகம் பெரிதுபடுத்துவதில்லை
- (இரங்கற் பா இல்லை , கல்லறைகள் எழுப்பப்படுவதில்லை, நினைவு நாள் கொண்டாட்டம் எதுவுமில்லை)
- ஒரு காட்டுப் பூவையேனும் பறித்து அவர்களது புதை மேட்டில் போட்டு மதிப்புச் செய்வதில்லை
- அவர்கள் மீது அன்பு கொள்வதில்லை
- என்னே மனிதர்? என்று ஏளனமும் வியப்பும் கலந்த தொனியில் சமூகத்தை விமர்சித்தல்

**(05 புள்ளிகள்)**

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න